செய்தி வெளியீடு எண்: 363 நாள்: 22.06.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 21.6.2019 அன்று தலைமைச் செயலகத்தில், எரிசக்தித் துறையின் சார்பில் ஈரோடு மாவட்டம் – அத்தாணியில் 8 கோடியே 17 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 110/22 கி.வோ. துணை மின் நிலையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாட்டின் 18 மாவட்டங்களில் 211 கோடியே 34 லட்சத்து 69 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 42 துணை மின் நிலையங்களையும் திறந்து வைத்தார்கள்.

மின்பாதையில் ஏற்படுகின்ற மின் இழப்பையும், மின்பராமரிப்பு செலவினங்களையும் குறைத்து, ஒவ்வொரு பகுதிக்கும் தேவைப்படுகின்ற உச்சகட்ட மின் தேவையை நிறைவு செய்யும் வகையில் சரியான மின் அழுத்தத்துடன் சீரான மின்சாரம் மக்களுக்கு வழங்கிட கூடுதல் துணை மின் நிலையங்கள் அமைப்பது அவசியமாகும் என்பதைக் கருத்தில் கொண்டு, தேவைக்கேற்ப புதிய மற்றும் தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு அமைத்து வருகிறது.

அந்த வகையில், ஈரோடு மாவட்டம் – அத்தாணியில் 8 கோடியே 17 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 110/22 கி.வோ. துணை மின் நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், மதுரை மாவட்டம் – நரசிங்கம்பட்டி மற்றும் திருவள்ளூர் மாவட்டம் – ஏலியம்பேடு ஆகிய இடங்களில் 25 கோடியே 65 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான இரண்டு 110/33 கி.வோ. துணை மின் நிலையங்கள்; ஈரோடு மாவட்டம் – கங்காபுரத்தில் 7 கோடியே 78 லட்சத்து 1 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையம்; கரூர் மாவட்டம் – நொய்யலில் 8 கோடியே 40 லட்சத்து 91 ஆயிரம் ரூபாய் மதிப்பீடிலான ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையம்;

தஞ்சாவூர் மாவட்டம் – திருப்புறம்பியம், திருநெல்வேலி மாவட்டம் – கரிசல்பட்டி, கரூர் மாவட்டம் – புலியூர், கடலூர் மாவட்டம் – கீழக்குப்பம் மற்றும் கோ.பூவனூர் ஆகிய

இடங்களில் 12 கோடியே 82 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான ஐந்து 110/33 கி.வோ. துணை மின் நிலையங்கள் (விகிதாச்சார அறிமுகம்);

தருமபுரி மாவட்டம் – கீரைப்பட்டி, இராமகொண்ட அள்ளி மற்றும் மாவேரிப்பட்டி, காஞ்சிபுரம் மாவட்டம் – நீரடி, கரூர் மாவட்டம் – அரவக்குறிச்சி மற்றும் உப்பிடமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம் – முதுகுறுக்கி, இருதுக்கோட்டை, எக்கூர், பூனப்பள்ளி மற்றும் மத்திகிரி, புதுக்கோட்டை மாவட்டம்– குளத்தூர் நாயக்கன் பட்டி மற்றும் மங்களா கோயில், சேலம் மாவட்டம் – சத்யாநகர், தஞ்சாவூர் மாவட்டம் – சுவாமிமலை, திருவள்ளூர் மாவட்டம் – மிட்டனமள்ளி, சின்னம்பேடு மற்றும் காரம்பாக்கம், திருவண்ணாமலை மாவட்டம் –அப்பேடு மற்றும் ஒண்ணுபுரம், திருநெல்வேலி மாவட்டம் – சேரன்மகாதேவி, திருப்பூர் மாவட்டம் – செங்கப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – விடத்திலாம் பட்டி (அமையபுரம் கிராமம்), தூத்துக்குடி மாவட்டம் – ஆத்தூர், வேலூர் மாவட்டம் – மொரசப்பள்ளி, கீரைசாத்து, கரிக்கல், பள்ளிகொண்டா, உதயேந்திரம், உப்பரப்பள்ளி மற்றும் மோடிகுப்பம், விருதுநகர் மாவட்டம் – மம்சாபுரம் மற்றும் S.கொடிக்குளம் ஆகிய இடங்களில் 156 கோடியே 68 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான மூப்பத்திமூன்று 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

என மொத்தம் 219 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 43 துணை மின் நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி. கருப்பணன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.விக்ரம் கபூர், இ.ஆ.ப, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**